[21st November 1963

(இ) இல்லையென்றால், இனியாவது ஊசி போடுவதற்கு நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) A pilot scheme for the immunisation of pre-school children against whooping cough, diphtheria and tetanus is being implemented in the primary health centres at Velliyur and Tirukkalukundram of Chingleput district. Mass immunisation of pre-school children will be taken up as a state wide programme as soon as the results of the pilot scheme are evaluated.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் தலைவர் அவர்களே, இந்த சிறு குழந்தை வியாதியான கக்குவான் இருமலுக்குத் தக்க மருந்தே இல்லை என்று டாக்டர்கள் எல்லாம் சொல்லுகின்றார்கள். இந்த வியாதி வந்துவிட்டால் குழந்தைகள் மூன்று மாதங்கள் செத்துத் தான் பிழைக்கின்றன. ஆகவே இந்த விஞ்ஞான உலகத்தில் இதைத் தடுப்பதற்கான தக்க மருந்து ஒன்றைக் கண்டுபிடிக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், இந்த கக்குவான் இருமல் நோய் வந்தால் மூன்று மாதம் நீடிக்கும் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். தமிழ் மருந்துகளில் கூட, இந்த நோய் மூன்று பிறை இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைத் தடுக்கின்ற முறையில் ப்ரி—ஸ்கூல்—குழந்தைகளுக்கு எல்லாம் ட்ரிப்பிள்—வாக்ஸைன் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த விஞ்ஞான நோக்கில் இந்த வியாதியை ஓரளவுக்குப் பெருகாமல் தடுப்பதற்கான மருந்துகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இருந்தாலும் மூன்று மாதங்கள் வரை நோய்க்குக் காலாவதி உண்டு என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த நோயைத் தடுத்துவிட முடியாது என்பதும் டாக்டர்களின் அபிப்பிராயம்.

புலவர் கா. கோவிந்தன் : இந்தக் கக்குவான் இருமல் நோயைத் தடுப்பதற்கான மருந்தை அதிக விலை கொடுத்து சாதாரண மக்கள் வாங்க முடியாமல் இருப்பதினால், எல்லோரும் அம்மை குத்திக் கொள்ளவேண்டும் என்று நிர்ப்பந்தம் இருப்பது போல், இதற்கான தடுப்பு மருந்தையும் குத்திக்கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நான் முன்னால் சொன்ன மூலக்கேள்வியின் பதிலே அது தான்.

Poet Bharathi (Birth day celebrations)

* 359 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state when a final decision would be taken regarding the celebration of the birthday of Poet Bharathi on 11th December each year in future?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal, Sir.